ஒரு குழந்தைக்கு 2 தாய்கள் உரிமை கொண்டாடுகின்ற நிலைமை கூட அண்மையில் ஏற்பட்டது. இதிலே அந்தக் குழந்தையின் ரத்தம், அந்தத் தாயின் ரத்தம், எச்சில் போன்ற பல சோதனைகள் செய்யப்பட்ட பிறகுதான் முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இதற்கு இந்தச் சோதனைக் கூடம்தான் தகுதியானது.

மதுரையில் விளையாட்டுத் திடல்.

*3091 திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாநகரில் மாணவ, மாணவிகளின் விளையாட்டுப் பயிற்சிக்காக அகில இந்திய தரத்திலும், தகுதியிலும் எல்லா வசதிகளும் கொண்ட விளையாட்டுத் திடல் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாநகரில் மாணவ மாணவிகளின் விளையாட்டுப் பயிற்சிக்காக அகில இந்திய தரத்திலும், தகுதியிலும் எல்லா வசதிகளும் கொண்ட விளையாட்டரங்கம் நான்கு மின்னொளி கோபுரங்களுடன் (Flood Light Towers) மதுரையில் ஏற்கெனவே உள்ளது.

திரு. சோ. பால்ராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இப்போது இருக்கின்ற விளையாட்டு மைதானம் உலக அரங்கில் குறிப்பாக இந்திய அரங்கில் எல்லா உபகரணங்களோடு, சகல வசதிகளோடு அமைந்து இருக்க வேண்டும் என்று கேட்பதோடு குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக எல்லிஸ் நகரப் பகுதியில் இப்படி ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதாக இருந்தது, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு அரங்கம் மிகப் பெரிய ஒன்று. 26 ஏக்கர் பரப்பளவில் ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிடப்பட்ட விளையாட்டுக்கான 'track, grounds Pit' இவை எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் ஏற்படுத்த வேண்டுமென்று கருதப்படுமானால் அது பற்றித் தனி ஆலோசனை தேவைப்படும்.

திரு. சோ. பால்ராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற மைதானத்திற்கு நமது தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய பெயர் முன்பு

1990 மார்ச் 23]

வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயர் மீண்டும் அங்கே வைக்கப் பட வேண்டுமென்று கேட்பதோடு, விளையாட்டுத் துறையில் பயிற்சி பெற்ற வீரர்களுக்கு இப்போது இருக்கின்ற நமது அரசிலும், போக்குவரத்துத் துறையிலும், மின் துறையிலும் வேலைக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 2-வது கேள்வியில் அரசின் பல துறைகளிலும் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படுமா என்று கேட்டார்கள். பல துறைகளில் விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பான சலுகைகள் வழங்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது எந்த அளவுக்கு வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறுதியிட்டுக் கூற முடியாது. நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெயர் ஏற்கனவே இந்த அரங்கிற்கு வைக்கப்பட்டு இருந்தது என்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து நான் அறிகிறேன். ஏற்கனவே வைக்கப்பட்ட பெயராக இருக்குமானால், அந்தப் பெயர் அப்படியே நீடிப்பதற்கு இப்போது தடை இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மைதானத்தில் பல்வேறு உபகரணங்கள் இல்லை என்ற குறைபாடும், அதை சரியாக செயல்படுத்துவதற்கான சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அதைக் கவனிப்பதோடு இந்த மைதானத்தை ஒட்டி இருக்கின்ற—மதுரை மாநகரத்தில்—பல்வேறு இடங்களில் சிறு சிறு பயிற்சிகளைச் செய்வதற்கு மைதானங்களை உருவாக்க வேண்டும். அந்த வகையில் மதுரை கிழக்குத் தொகுதியில் அனுப்பானடி பகுதியில் இப்போது புதிதாக வீட்டு வசதி வாரியம் அமைத்துக் கொண்டிருக்கிற பகுதியில் பல்வேறு பயிற்சிக்குத் தனித் தனியாக பயிற்சி அளிக்கின்ற சிறு, சிறு மைதானங்களை உருவாக்கினால், இந்த மைதானத்தில் அந்தப் பயிற்சிகளை முடிப்பதற்குத் துணையாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வதற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டு அரங்கம் முதல் தர மான விளையாட்டு அரங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிற காரணத்தாலே, இந்த அரங்கத்தில் இன்ன, இன்ன செய்யப் பட வேண்டும் என்று குறை சுட்டிக் காட்டப்படுமானால், அவற்றை நிறைவேற்றுவது என்பது ஒரு முக்கியமான கடமை யாக ஆகிவிடும். அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் புதிய விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று வெவ்வேறு அமைப்புகள் விரும்பி உருவாக்குகிற காரணத்தால்,

அந்த அமைப்புகள் இந்த விளையாட்டுத் துறையோடு (Sports Department) தொடர்பு கொண்டால், எந்த வகையில் இந்த விளையாட்டுத் துறை அந்தக் கடமையிலே பங்குகொள்ள முடியும் என்பது ஆய்வு செய்யப்பட்டு அதற்குப் பின்னர் தீர்மானிக்கப்பட வேண்டும்.

9-15 மணி

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால்ராஜ் அவர்கள், மதுரை விளையாட்டு அரங்கத்திற்கு முதலமைச்சர் கலைஞருடைய பெயர் இருந்ததை ஞாபகப்படுத்தினார்கள். அந்த விளையாட்டு அரங்கம், பொது மக்களிடமிருந்து நிதி வசூலிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதற்கு "கலைஞர் கருணாநிதி ஸ்டேடியம்" என்று பெயர் இருந்தது. எமர்ஜென்சி நேரத்தில் அந்தப் பெயர் அகற்றப்பட்டது. மறுபடியும் அரசு அந்தப் பெயரை வைப்பதற்கு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை நான் இப்போது தான் அறிகிறேன். ஏற்கெனவே வைக்கப்பட்ட எந்தப் பெயராக இருந்தாலும், இடைக்காலத்திலே நீக்கப்பட்டிருக்குமானால் அது தொடர்வதற்கு இன்றைக்கு வழி இருக்கிறது, நியாயம் இருக்கிறது. உரிய ஆணை வெளியிடப்படும்.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள நேரு விளையாட்டு அரங்கம் அகில இந்திய தரத்திலும் தகுதியிலும் இல்லையென்று சொல்லப்படுகிறது. குறைபாடுடையதாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்த விளையாட்டு அரங்கத்தை எல்லா வகையிலும் உயர்த்திட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக நான் விடை கூறமுடியா விட்டாலும் கூட, அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதுவார்களேயானால், உரிய முறையில் தகுந்த நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படும்.

புத்தனாம்பட்டி தனியார் கல்லூரி.

*6470 திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

முழுமையான அரசு மானியத்தில் நடத்தப்படுகின்ற புத்தனாம்பட்டி தனியார் கல்லூரியை அரசே ஏற்கும் திட்டம் உள்ளதா?